# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!




## 'வேடனுடைய கண்ணிக்கு' தப்புவிக்கும் ஆண்டவர்!

பறவையின் பார்வையில் 'வேடனின் கண்ணி' தெரிவதில்லை! 'வைரஸ்' கிருமியும் அப்படித்தான்! வல்லரசோ அல்லது தேசாதிபதியோ, யாரும் இதற்கு தப்ப இயலாது! அதன் 'பாழாக்கும் கொள்ளைநோய்' முழு உலகத்தையும் ஆட்டிப்படைக்கும்! இந்த 'கண்ணிக்கு' தப்புவிக்க ஒரே வழி கர்த்தர்! உன்னதமானவர் நம்மை தப்புவித்து காக்கும் பட்டியலின் முதல் பகுதி இந்த வேடனின் கண்ணியான 'வைரஸ்' தான்! (சங்.91:3). விடை தரும் இரண்டாம் வசனம் கூறுகிறபடி, யாரெல்லாம் "நீர் **என்** அடைக்கலம்.... **என்** தேவன், **நான்** நம்பியிருக்கிறவர்!" என மெய்யாகவே தங்கள் வாழ்வின் அறிக்கையாய் கொண்டார்களோ, அவர்களை நிச்சயமாய் இந்த 'வைரஸ்' வேடனின் கண்ணிக்குத் தப்புவிப்பார்! அல்லேலூயா.

-tr

பெட்டகம் 22 அக்டோபர் 2020 பரல்கள் 10



## தேவனால் ஆட்கொள்ளப்படுவதே 'ஆராதனை'

தேவனை ஆராதிக்க உந்தும் ஒருவனுடைய ஆவியில், முதலாவது நிலை கொண்டிருக்க வேண்டியது "அளவில்லாமல் தேவன்மீது கொண்ட நம்பிக்கையே யாகும்!" இப்படி ஒரு விசால நம்பிக்கையை தேவன் மீது வைத்திராதவன், அவரை ஆராதித்திட முடியாது.

ஆகவே தேவனை முழு நம்பிக்கையுடன் தன் ஆவியில் நெருங்கினவன், அவருடைய மகத்துவ மேன்மையை புகழாமல் இருந்திட முடியாது! அவரது ஆவியை நெருங்கிவிட்ட அவன், தேவனால் முற்றிலும் சிறைப்பட்டு போவான்!

சர்வ வல்ல தேவனுடைய அன்பினால் கவரப்பட்டு, தேவனோடு ஒன்றர கலந்து, அவருக்கு முன் "அதமானேன்!" என முகம்குப்புற பணிந்து கிடப்பான்!!

இந்த அற்புத சமயத்தில்தான், தன் முழுப் பெலத்தையும் கொண்டு "தேவனே நான் உம்மை நேசிக்கிறேன்!" என பரவசமாய் அவரை அன்புகூருவான். அந்த முழுமையான நேசத்தில் தெய்வ பயமும், அதிசயமும், ஏக்கமும், ஆச்சரியமும் கலந்திருக்கும்! சில சமயங்களில், தன் ஆராதனையின் இறுதியில் 'மூச்சடைத்து மௌனமாகி' விடுவான்! ஏனெனில், தேவனுடைய ஆவியில் அவனது ஆவி ஒன்றர கலப்பதே அந்த இரகசியம்!

*-Ed*

'பரலோக பொக்கிஷங்கள்' வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## கிறிஸ்தவ மத பக்தியா? கிறிஸ்துவின் ஜீவியமா?

**தே**வன் முதலாவது நியாயப்பிரமாணத்தைக் கொடுத்ததின் நோக்கம் என்னவென்றால், மனுஷர் புகழ்ச்சியை சம்பாதித்து தரும் நியாயப்பிரமாணத்தின் 'வெளியரங்கமான நீதியில்' ஒருவன் திருப்தி கொண்டிருக்கிறானா அல்லது **இன்னும் அதிகமாய் தேவனைத் தேடுகிறானா?** என காணும்பொருட்டே ஆகும்! ஆனால், இன்று எண்ணற்ற விசுவாசிகள் 'வெளியரங்கமான நீதியாகிய' தங்களை மூடியிருக்கும் அத்தி இலைகளில் திருப்தியாய் இருக்கிறார்கள். இவர்கள் யாவரும் கிறிஸ்தவ மத பக்தர்கள்! வெறும் மத பக்தியை வெறுத்த இயேசுவோ, ஒரு சமயம் தன்னை அத்தி இலைகளால் நிறைத்திருந்த அத்தி மரத்தை சபித்தார் என மாற்கு *11:13,14,21* வசனங்களில் வாசிக்கிறோம். சுவிசேஷமோ நாம் இரட்சிக்கப்படும்படி **தேவ பெலனாய்** இருக்கிறது. இந்த நற்சுவிசேஷமே, வெற்று இலைகளை சபித்து, அவைகளை உதிரப்பண்ணி, தேவன் மனுஷனுக்கு கொடுக்க விரும்பும் உண்மையான பரிசுத்தமாகுதலின் ஜீவியத்தை நமக்கு வழங்குகிறது!

ஆனால், இந்த சுவிசேஷம் மெய்யாகவே நமக்குப் பலன்தர வேண்டுமென்றால், நாம் முதலாவது ஆணித்தரமாய் மனந்திரும்ப வேண்டியதே அவசியமாயிருக்கிறது. 'ஆணித்தரம்' (RADICAL) என்ற வார்த்தை, மரத்தின் ஆணிவேரிலிருந்து (RADICAL ROOT) தோன்றிய வார்த்தையாகும். இவ்விதமே நம்முடைய மனந் திரும்புதல் நம் **இருதயமாகிய ஆணிவேரின் ஆழத்திலிருந்து** தோன்றுவதாய் இருக்க வேண்டும். ஆழமாய் மனந்திரும்புதலின் பொருள் இதுவே ஆகும். இயேசுகிறிஸ்துவுக்கு முன்னோடியாக, மனந்திரும்புதலின் செய்தியைக் கொண்டுவந்த யோவான் ஸ்நானகன் கூறும்போது "இயேசு **கோடாரியை மரத்தின் வேர் அருகில்** வைத்திருக்கிறார்" என்றே கூறினார். ஆம், ஒவ்வொரு பாவமும் இருதயமாகிய வேரிலிருந்தே தோன்றுகிறது. 'மரத்தின்மேல் வெளியரங்கமாகும் கனியாகிய பாவத்திற்காக' மாத்திரம் மனந்திரும்புவோம் என்றால் நாம் இன்னமும் ஆணித்தரமாய் மனந்திரும்பக் கற்றுக்கொள்ளவில்லை! உதாரணமாய் புறங்கூறுதல் என்ற பாவம், ஒரு சகோதரன் மீது

உருவாகும் தவறான அபிப்பிராயம் என்ற வேரிலிருந்து தோன்றியதே ஆகும். ஆணித்தரமான மனந்திரும்புதல் இந்த **தவறான அபிப்பிராயத்தின்மீது** ஆழமாய் கிரியை செய்வதாய் இருக்குமே அல்லாமல் புறங்கூறுதல் என்ற கனியாகிய **செயலின்மீது** மாத்திரம் கிரியை செய்வதாய் இருக்காது! நாம் வெளியே உள்ள செய்கைகளை மாத்திரம் மாற்றுபவர்களாய் இருந்தால், அது மரத்தின் மேலே தோன்றிய பழங்களை கத்தரிக்கோலினால் வெட்டியதற்கு ஒப்பாகவே இருக்கும். ஆனால், இயேசுவோ 'கத்தரிக்கோலோடு' வராமல், வேரை வெட்டும் படி 'கோடாரியோடு' வந்தார் என்றே சுவிசேஷம் நமக்கு அறிவிக்கின்றது.

**எனவே, உண்மையான ஆவிக்குரிய மனுஷன் ஜனங்களின் நல் அபிப் பிராயத்திற்காக மேலே தோன்றும் கெட்டபழங்களைப் பிடுங்குவதில் திருப்தி கொள்ளாமல், தேவனுடைய வெளிச்சத்தில் தனக்குள்ளிருக்கும் 'பாவத்தின் வேரை' ஆணித்தரமாய் நியாயந்தீர்க்கக்கூடியவனாய் இருப்பான்!**

கிறிஸ்தவ மதபக்தி ஜனங்கள் மிக எளிதில் வஞ்சிக்கப்படுவார்கள். ஒரு கணவன் தன் மனைவியின்மீது **தீமையான மனோபாவத்தை** உடையவனாய் சுமார் ஆறு மாதங்கள்கூட இருக்கமுடியும்! இந்த ஆறு மாத காலமும் தன்னை அடக்கிக்கொண்டு மனைவியைப் பாதிக்கும் படியான ஒரு வார்த்தைகூட பேசாமலே இருக்கமுடியும்! ஆனால், நீண்டகால இவனுடைய 'சுய கட்டுப்பாடு' ஒருநாளில் பயங்கர கோபமாய் கொப்பளித்து வெடித்துவிடும்! இவ்வளவு பரிதாபமான தன்னுடைய நிலையில், தான் ஆறு மாதங்கள் ஜெயவாழ்க்கை வாழ்ந்ததாகவும், கோபமடைந்த இக்குறிப்பிட்ட தருணத்தில் மட்டுமே தான் பாவத்தில் விழுந்ததாகவும் தன்னைக்குறித்து எண்ணிக் கொள்வானென்றால், துளியும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இவன் தன்னைத்தானே வஞ்சித்துக்கொண்டவனாய் இருப்பான்!

உண்மையில் இவன் செய்ததெல்லாம் பயங்கர வெடி குண்டுக ளான 'டைனமைட் - குச்சிகளை' ஆறு மாத காலமாக ஒவ்வொன்றாய் சேர்த்து குவித்துக் கொண்டிருந்தான்! இவ்வாறு சேர்த்து முடித்த கடைசி நேரத்தில், ஒரு சிறிய தீக்குச்சி அவ்விடத்தில் கொளுத்தப் பட்டதும் குவிக்கப்பட்டிருந்த அத்தனை டைனமைட் - குச்சிகளும் பயங்கரமாய் வெடித்துவிட்டது! காலமெல்லாம் இவன் பாவத்தில்தான் வாழ்ந்து கொண்டிருந்தான்.... ஆனால், அவைகளோ நீண்டகாலமாக வெளியே தோன்றவில்லை, அவ்வளவுதான்! எனவே இப்போது பயங்கர வெடி விபத்திற்கு காரணம், தீக்குச்சி அல்ல.... மாறாக, இவன் ஆறு மாதங்களாய் சேர்த்துக் குவித்த டைனமைட் -

*குச்சிகளேயாகும்!*

*காரியம் இவ்வாறு இருப்பதால், நாம் பிறர்மீது கொண்டுள்ள மனோபாவத்தில் நம்மை* "**தேவனுடைய அன்பிலே**" *காத்துக்கொள்வதற்குரிய யுத்தத்தை நாம் செய்யாவிட்டால் (யூதா 21), நாம் என்னதான் ஓர் மார்க்க பக்தனாய் இருந்து ஓர் வெளியரங்கமான நல்ல சாட்சியைப் பெற்றிருந்தாலும், இன்னமும் பாவம் செய்கிறவர்களாய்தான் இருப்போம்! இன்று அநேக விசுவாசிகளிடம், ஆவிக்குரிய நிலையைப் பகுத்தறியும் திறன் காணப்படாதபடியால், "ஆறு மாதம் சுய - கட்டுப்பாடோடு டைனமைட்-குச்சிகளை சேர்த்துக் குவித்தவனை* **ஆவிக்குரியவன்!**" *என தவறாக எண்ணிக்கொள்கிறார்கள்!*

*நாம் பாவத்தை "பாவமாக" கருதாவிட்டால் ஆணித்தரமான மனந்திரும்புதல் நம்மில் ஒருக்காலும் ஏற்படாது.... கிறிஸ்தவ மத பக்தியிலிருந்தும் விடுதலையாக முடியாது! இயேசு கற்பித்தபடி கோபத்தை அதற்குரிய உண்மையான பெயராகிய* "**கொலை**" *என்றே நாம் அழைக்க வேண்டும் (மத்தேயு 5:21,22). இவ்விதமே ஒவ்வொரு பாவத்தையும்* **புதிய உடன்படிக்கையின் வெளிச்சத்தில்** *காணத் தவறுவீர்களென்றால், நீங்கள் உங்கள் வாழ்நாளெல்லாம் கிறிஸ்தவ மத பக்தியின் போர்வைக்குள்தான் சிக்கியிருப்பீர்கள்! ஆம், நீங்கள் ஒருக்காலும் உண்மையான ஆவிக்குரிய நிலையை அடைய மாட்டீர்கள்! ஓர் கிறிஸ்தவ மத பக்தன் வெளியரங்கமான தன் நீதியில் மிக மிகத் துல்லியமாக நடந்து கொள்ள முடியும்.....*

> **பரிசேயர்கள் சீரகத்திலும், ஒருத்தலாமிலும், வெந்தயத்திலும் கூட, சரியாக தசமபாகம் (10%) செலுத்தினார்கள். இவ்வாறாக வெளியரங்கமான நீதியில் இவர்கள் 1 மில்லி மீட்டர்கூட விலகாதிருந்தார்கள்! இருப்பினும், இவர்களோ அன்பிலிருந்தும், இரக்கத்திலிருந்தும், நற்குணத்திலிருந்தும் பல மைல்கள் தூர விலகிச் சென்று விட்டார்கள்!**

*இந்த அபாயம் நீதியின் வாழ்க்கையை வாஞ்சித்துப் பின் தொடரும் நம் யாவருக்குமே உள்ளது. 100% வெளியரங்கமான நீதியில் வாழ்ந்துவிட்டு, அன்பின் பாதையிலிருந்து 100% விலகிச் செல்லும் அபாயம்!* **புதிய உடன்படிக்கையின் நீதியின் பாதை, அன்பின் பாதையே ஆகும்.** *நாமோ இந்த அன்பின் பாதையைவிட்டு 1 மில்லி மீட்டர்கூட விலகி விடாமல் இருப்பதற்கே மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டும். ஆம், இதுவே உண்மையான ஆவிக்குரிய நிலைக்கு வழியாகும்!*

*பாவ - உலக வாழ்வினிமித்தம் நரகத்திற்குச் செல்பவர்களைக் காட்டிலும், மாயமான கிறிஸ்தவ மத பக்தியினிமித்தம் (பரிசேயர்*

*களைப் போல!) நரகத்திற்குச் செல்லும் ஜனங்களே அதிகமாய் இருக்கிறார்கள். இதனிமித்தமே கிறிஸ்தவ மத பக்திக்கும் ஆவிக்குரிய நிலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்பதற்கு நாம் மிகவும் ஜாக்கிரதை கொண்டிருக்க வேண்டும்! நம்முடைய வெளியரங்கமான கிரியைகள் நல்லதாக இருந்தாலும், அவைகள் கர்த்தரைப்பற்றிய ஊக்கமான அன்பினால் தூண்டப்பட்டதாய் இல்லையென்றால், அக்கிரியைகள் யாவும் வெறும் 'கிறிஸ்தவ மத பக்தி!' என்ற எச்சரிக்கையை நாம் மனதில் கொள்ளக்கடவோம்!*

---

## 'ஊழிய பாதையின் துன்பம்' பவுலுக்கு பொக்கிஷமாகியது!

*பவுல் ஊழியம் செய்த கொரிந்திய சபை, பவுலை மெய்யாகவே 'புடைத்தது' என கூறலாம். 2கொரிந்தியர் 4-ம் அதிகாரத்தில் பவுல் கூறும்போது "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி 'இந்த பொக்கிஷத்தை'* **மண்பாண்டங்களில்** *பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனம் முறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப் பட்டும் கைவிடப்படுகிறதில்லை! கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை" எனக் கூறினார். சத்தியத்திற்கு தூணாய் நின்ற பவுல் அப்போஸ்தலனுக்கு, அவர் ஊழியம் செய்த சபையில் அவருக்கு ஏற்பட்ட கொடிய துன்பங்களைப் பாருங்கள்! பவுல் அடைந்த துன்பங்கள், கிறிஸ்து அடைந்த துன்பங்களுக்கு சமமானது என்றே கூறலாம்.*

*ஏனெனில், அவை யாவும் 'உள்ளான' துன்பங்கள்! முழுவதும் ஆத்துமாவிற்கு உரியவைகள்! கொரிந்திய சபையில், பவுலுக்கு விரோதமானவர்கள் கொண்டு வந்த தாக்குதல்களின் வேதனை அவ்வளவு கொடூரமாயிருந்தது.* **"தான் வெறும் மண்பாண்டம்" என தன் பெலவீனத்தை உணரும் கடைசி எல்லை வரை** *பவுல் தாக்கப்பட்டார். ஆத்துமாவிற்கு ஏற்படும் துன்பம், சரீர துன்பத்தை விட கொடிய வலியது!*

*பவுல் அடைந்த துன்பத்திலிருந்து அநேக சத்தியங்களை நாமும் அறிந்து கொள்ளச் செய்திருக்கிறார். அவைகளில் சில, மனமடிவிற்கு ஏதுவாயிருந்தது என பவுலே இந்த வசனத்தில் கூறியுள்ளார். ஆகிலும் "நான் அந்த கதியை அடையவில்லை" என பவுல் வெற்றி முழக்கமிட்டார்!*

*'துன்மார்க்கம்' தனக்குதானே போதித்துக் கொள்ளும் திறனுடையது! கோபம் கொண்ட ஆவியுள்ளவன் 'எதை வேண்டு*

*மானாலும்' தர்க்கத்திற்கு கொண்டு வருவான்! பொறாமை கொண்டவன், குற்றம் சாட்டும் தருணத்திற்காகவே, காத்திருப்பான்! எவ்வளவு பரிசுத்தமாய் ஜீவித்தாலும், அவனையும் குற்றப் படுத்துவான்! தேவ குமாரனையும் தாக்குவான்.... எத்தனை உண்மையாய் வாழும் உத்தம தீர்க்கத்தரிசிகளையும் தாக்குவான்! உபவாசத்தோடு வந்த யோவான் ஸ்நானகனைப் பார்த்து "இவனுக்குள் பிசாசு இருக்கிறது" என தாக்கினார்கள்! புசிப்புடனும் குடிப்புடனும் வந்த கிறிஸ்துவை "பெருந்திண்டிக்காரன்" என தாக்கினார்கள்.*

**இவ்வாறு நன்மை அனைத்தும் தீமையாய் பரிகசிக்கப்பட்ட நேரத்தில், துன்பங்களை தன் ஆத்துமாவில் சகித்த *பவுல்* 'இவை அனைத்தும் எனக்கு பொக்கிஷங்களாய் மாறின' எனக் கூறிய அவரின் சாட்சியே.... "தேவனுடைய உத்தம ஊழியன்" என்ற பங்கை அவருக்கு கொண்டு வந்து கொடுத்தது!**

*எந்தவொரு கிறிஸ்தவ ஊழியனும், இவ்வாறு "தேவ ஊழியனாய்" அங்கீகரிக்கப்படுவதற்கு,* **இந்த துன்பத்தின் வழியே** *இன்றும் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது!*

*இதை பவுல் குறிப்பிடும்போது "சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்று எண்ணின படியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்" எனக் கூறினார் (1தெச.2:4). ஆகவே, எந்த துன்பத்திலும், தேவனால் அங்கீகரிக்கப்படும்படி தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதை பவுல் அறிந்திருந்தார். "மனதில் தோன்றும் எதை வேண்டுமானாலும் பேசும் மனிதர்களுக்கு" அஞ்சி, அவர்களைப் பிரியப்படுத்த கூடாது என்பதையும், உத்தம ஊழியனின் பங்காய் கூறினார். துன்பங்கள் அனைத்தும், தன் இருதயத்தை தேவன் சோதித்தறியும் முக்கிய நேரமாய் காண்பதற்கும் பவுல் நன்கு அறிந்திருந்தார். பரிசுத்தவான் தாமஸ்கெம்பிஸ் கூறியதை நான் மறப்பதில்லை. அவர் கூறினார்:*

**"என்னுடைய சமாதானத்தை, மனுஷனுடைய நாவை சார்ந்து கொள்ளாதிருக்க பல வருடங்களுக்கு முன்பாகவே தீர்மானித்தேன்! மனுஷர்கள் நம்மை நியாயந்தீர்ப்பது நன்மையாயிருந்தாலும் அல்லது தீமையாயிருந்தாலும் அவர்களைக் குறித்து நமக்கு கணக்கு இல்லை..... நம்மிடம்தான் கணக்கு கேட்கப்படும்!" என கூறினார்.**

*எந்தவொரு கிறிஸ்தவனும் முதலாவது தகுதிபெற வேண்டிய இடம் "மற்றவர்களால் தீது பேசப்பட" தன்னை தயார் நிலையில் வைத்துக் கொள்வதுதான்! நீங்கள் ஒன்றும் செய்யாதிருந்தால்*

“சோம்பேறி” என தீது மொழி கேட்கும்! எதையாகிலும் ஒன்றை செய்தால் “இவைகளை ஏன் செய்யவில்லை?” என தீதுமொழி கேட்கும். நீங்கள் மெய்யாய் கிறிஸ்துவின் சீஷர்களாகவோ அல்லது அவரது ஊழியர்களாகவோ இருந்தால், உங்களைச் சுற்றியுள்ள ஜனங்களில் சிலர் “**பூச்சியைப் போல்**”நிற்பார்கள். பூச்சி நிற்பதை காண முடியாது. ஆனால், அவ்வப்போது கொட்டும் போது ‘அந்த பூச்சிகளை’ காண்பீர்கள்! பயணம் செய்ய துணிந்தவன், தன் பயணத்தில் துன்புறுத்தும் பூச்சிகளையும் தாண்டி வர கண்டிப்பாய் மனதை திடப்படுத்தி கொள்ள வேண்டும்!

**மனிதர்கள் புகழும் எவ்வித புகழ்ச்சியும், உங்களை தேவனுக்குப் பிரியமாய் மாற்றிட இயலாது! அதேபோல, உங்களை துன்மார்க்கமாய் புறங்கூறும் நாவுகள், “தேவன் தன் ஜனத்தின் மீது வைத்திருக்கும் நல்ல சாட்சியாகிய அவரது மனநிலையை எவ்விதத்திலும் மாற்றிட இயலாது!”**

தேவன், நம் ஒவ்வொருவரையும் அறிந்து வைத்திருக்கிறார்! நாம் நின்றாலும் அல்லது வீழ்ந்தாலும் நம் ஆண்டவருடைய பூரண அறிவின்படியே சகலமும் நடக்கிறது என்பதை அவர் பக்தர்கள் யாவரும் நன்றாய் அறிந்திருப்பார்கள். இங்கு மீண்டும் நான் வலியுறுத்திக் கூறுவதெல்லாம் “ஓ கர்த்தாவே, என்னுடைய சமாதானம் மனுஷருடைய நாவுகளைச் சார்ந்திராதிருக்க கிருபை செய்தருளும்! என்னை கொட்டும் பூச்சிகள் தொந்தரவாய் தோன்றினாலும்.... நானோ பயணத்தின் முடிவை அடைந்து, உம்மால் அங்கீகரிக்கப்பட்ட மெய் சீஷனாகவோ அல்லது உத்தம ஊழியனாகவோ நிலைநின்றிட கிருபை செய்தருளும்!” என நான் ஏறெடுக்கும் ஜெபம், உங்கள் ஜெபமாயும் மாறட்டும்!!

– A.W. டோசர்

---

## துன்பங்களில் நான் கண்டடைந்த ‘நூறு பங்கு’ பலன்!

என் கணவர் மரிப்பதற்கு சில வருடங்களுக்கு முன்பாக, வீட்டிற்கு வெளியில் உள்ள வேலைகளைச் செய்து வரும் ஒரு வேலைக்காரர், என்னிடம் ஓடோடி வந்து “ஒரு ஏழை சிப்பாய்” நடுரோட்டில் மரண தறுவாயில் இருப்பதாகக் கூறினார். அந்த சிப்பாயை, சீக்கிரமாய் எங்கள் அரண்மனை ஸ்தலத்திற்கு கொண்டு வரும்படி கூறி, அந்த சிப்பாயை தங்க வைத்து கவனித்துக் கொள்ள ஒரு அறையை ஆயத்தம் செய்தேன். சுமார் 15 நாட்கள் அந்த சிப்பாய் மரண அவஸ்தையிலிருந்து விடுதலை பெற்று சுகத்துடன் இருந்தார். சிப்பாய் பணியில், பல இடங்களில் அவர் சரீரம் பாதிக்கப்பட்ட

படியால், உள் காயத்தினிமித்தம் சீழ் வெளிவந்து, யாரும் அவரை நெருங்க முடியாத துர்நாற்றம் வீசியது.

**அரண்மனையில் பணி செய்தவர்களில் ஒருவர்கூட 'சீழ் வழிந்த' அந்த சிப்பாயை நெருங்கி வந்து உதவி செய்ய மறுத்து விட்டார்கள். இந்த நிலையில் எனக்குள் இருந்த கிறிஸ்துவின் அன்பை அந்த சிப்பாய் ருசிக்கும்படி, நான் அவனுடைய அறைக்குச் சென்றேன். ஒரு சில மணி நேரங்கள் அவனுக்குரிய தேவைகள் அனைத்தையும் நான் செய்து கொடுத்தேன்.**

எத்தனையோ சீழ் வடிந்த புண்களை சுத்தம் செய்து நான் மருந்து கட்டியிருந்தாலும், இந்த சிப்பாயின் உடலிலிருந்து வெடித்த சீழ் அவ்வளவு மோசமாயிருந்தது. அதனிமித்தம் 'முகச் சுழிவை' நான் அவருக்கு காட்டவில்லை. தெய்வ அன்பின் கருணையை ருசித்த அவர், தன் ஆத்துமாவில் நிம்மதி பெருமூச்சு விட்ட சில மணிநேரங் களில், அந்த சிப்பாய் மரித்து விட்டார்! அவர் கர்த்தரை விசுவாசித்து மரித்தார் என்றே நான் நம்புகிறேன்.

இப்போது, என் ஒருமகன், ஒருமகள், ஆகிய இரண்டு பிள்ளைகளுக்கு 'கிறிஸ்துவின் மன உருக்கத்தை' காண்பிக்க வேண்டிய பங்கையும் தொடர்ச்சியாக செய்து வந்தேன்! என் இளைய மகனை அதிக கரிசனையோடு கர்த்தருடைய கரத்திற்குள் நடத்தினேன். அவன் தன் பள்ளி படிப்பை முடித்து உயர் கல்வி செல்ல வேண்டிய நேரம் வந்தது. அந்நாட்களில் நிலவிய நாட்டின் நடப்புபடி, அவனை வெளியூர் அனுப்பி படிக்க வைப்பது ஓர் நல்ல சூழ்நிலையாய் எனக்குத் தோன்றவில்லை. என் மகளையோ, என்னோடு ஜெனிவா அழைத்துச் செல்ல தீர்மானித்திருந்தேன். அவ்வித ஏற்பாடு நடந்த சமயத்தில் என் மகள் அதிக வியாதிப்பட்டாள். ஆகிலும் அவள் சீக்கிரமாய் சுகமடைய கர்த்தர் கிருபை செய்தார். இதுபோன்ற பாசம் காட்டவேண்டிய தருணங்களில் "நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் கொண்டிருந்த அன்பைவிட, கர்த்தரோடு வைத்திருக்கும் அன்பும் ஐக்கியமும் அதிக வலிமையாய் இருக்கிறதா?" என சோதித்துப் பார்த்து, **கர்த்தரோடு கொண்டிருந்த பிரதான அன்பை** உறுதிப்படுத்திக் கொண்டேன்.

பொதுவான திருமண உடன்படிக்கையைப் போலவே, என் ஆத்தும மணவாளனோடும் நான் உடன்படிக்கை செய்திருந்தேன். அந்த உடன்படிக்கையின்படியே.....

**"நான் உங்களுக்காக எனக்குரிய எல்லாவற்றையும் அர்ப்பணிக்கிறேன். உங்கள் விருப்பத்தின்படி நீங்கள் செல்லுகிற இடம் எதுவோ அந்த இடத்திற்கே உங்களைப் பின்பற்றி வர நான் முழு ஆயத்தமாயிருக்கிறேன்!" என்ற இந்த வரிகளை என்னோடு நிரந்தரமாய் வைத்துக் கொண்டேன்.**

*என் மணவாளன் நடத்திச் சென்ற பாதைகளில், சிலசமயம் எனக்குள் தயக்கம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால் "மணவாளனுடைய சித்தத்தை" நான் சிறிதுகூட சந்தேகித்தது இல்லை!*

*கர்த்தரோடு கொண்டிருந்த உறவை நான் உறுதிபட காத்துக் கொண்ட போதிலும், லாபத்தையும்-செழிப்பையும் அளவு கோலாய் முன்வைத்து பிறரை நியாயந்தீர்க்கும் கிறிஸ்தவ உலகில், நான் அடைந்த பாடுகள், நிந்தைகளை காண்பித்து என்னை தீதாய் விமர்சித்ததை என் அனுபவமாய் பெற்றேன்! நான் பெற்ற கர்த்தருடைய விசேஷ அழைப்பை கூட 'அலட்சியம் செய்து' விமர்சித்தார்கள். இவர்களின் தீதான விமர்சனங்களின் மூலமாய்* **நூதனமான அவமான சிலுவைகள்** *என்னை வந்து சேர்ந்தன. இவ்வாறு நிகழ்ந்த தீது சம்பவங்கள் என்னுடைய அழைப்பையும் உறுதி தன்மையையும் இன்னும் அதிகமாய் திடப்படுத்தியது! கர்த்தர் அருளிய சிலுவையின் பாதையை 'அவமான சின்னமாய்' பரிகசித்த அநேகர் என்னைச் சூழ்ந்திருக்கும் சமயத்தில்தான், 'என்னை இராஜினாமா செய்து' என்னுடையவைகள் அனைத்தையும் நான் கர்த்தருக்கு செய்த சமர்ப்பணம்* **பூரண தெய்வீக சித்தம்** *என்பதை எனக்குள் ஆழமாய் பதியச்செய்தது!*

*இயேசு வழங்கிய சுவிசேஷத்தினிமித்தம், இயேசுவின் மீது கொண்ட அன்பினிமித்தம், யாரெல்லாம் தங்கள் முழுமையும் விட்டு வந்தார்களோ, அவர்களுக்கு ஆண்டவர் மனமுவந்து வழங்கும் வாக்குதத்தம் என்னவென்றால் "நூறத்தனையான நித்திய ஜீவனையும், ஆசீர்வாதத்தையும் மாத்திரமல்லாமல்....* **துன்பங்களும் அவர்களோடே கூட அருளப்படும்!**" *எனக்கூறும் வாக்குதத்தத்தை மிக அருமையானதாகவே நான் எடுத்துக்கொண்டேன்! (மாற்கு 10:30). அது ஏனென்றால் "எனக்குரிய நூறு சதவீதத்தையும் என் ஆண்டவர் தனக்கு சொந்த மாக்கிக் கொண்டார்" என்ற சத்தியமேயாகும்.*

> *அதுமாத்திரமல்ல, எனக்கு நேர்ந்த அத்தனை துன்பங்களிலும் சீரும் புயல்கள் மத்தியிலும், நான் எப்பக்கத்தில் நெருக்கப்பட்ட நேரங்களிலும் 'பூரண அமைதியை' என் உள்ளத்தில் அவர் தந்தது நூறு பங்கு பலன் அல்லவா! நான் முற்றிலும் அவரால் ஆட்கொள்ளப்பட்டு, அவருடைய சிறையிருப்புக்குள்ளாய் இழுக்கப் பட்டு, சொல்லி முடியாத சந்தோஷத்தையும், பூரித்த இருதயத்தையும் அவர் எனக்குத் தந்ததும் நூறு பங்கு பலன் அல்லவா!*

*ஆகவே, நான் மனதார கூறுவதெல்லாம், பாடுகளின் சிறையிருப்பு அது முடிவடையும் காலத்திற்கு முன்பாக, கர்த்தர் அதை அகற்ற வேண்டும் என நான் விரும்பவில்லை. உண்மையை சொல்ல வேண்டு*

மென்றால் 'கர்த்தர் அனுமதிக்கும் எல்லா கட்டுகளையும் நான் மனதார நேசிக்கிறேன்!' இப்போது நான் அடைந்திருக்கும் நிலையானது "எனக்கு எதுவாயிருந்தாலும், எல்லாவற்றையும் சமமாகவே காண்கிறேன்! என் சொந்த விருப்பமென்று எனக்குள் எதுவுமே இல்லை! என்னை முற்றிலும் ஆட்கொண்டவர் எனக்குத் தருவ தெல்லாம் அவருடைய பரிபூரண சித்தமும்! அவரது களங்கமில்லாத அன்புமே!" ஆகும். இவ்வித இனிமையை 'என் உணர்வுகள்' ஏற்றுக் கொள்ள மறுத்தது உண்மைதான்! ஆனால், அது ஒன்றும் என்னை பாதிக்கவில்லை.... ஏனென்றால், பல வருடங்களாய் என் இருதயம் இந்த உணர்வுகளை விட்டுப் பிரிந்தே வாழ்ந்தது! நான் பெற்ற நீடிய பொறுமை, என்னுடையதல்ல! சகலமும் அவரால் உண்டாயிற்று. அவரே என் ஜீவன்! உண்மைதான், நான் அவருக்குள் பிழைத்து, அசைந்து, என் முழுமையும் அவருக்குள் வைத்திருக்கிறேன்! அவரது திரு நாமத்திற்கே புகழ் உண்டாவதாக.

– மேடம் குயான்

---

## 'திருந்தியவர் குற்றம்' மீண்டும் மனதில் தோன்றக்கூடாது!

என்னுடைய ஆசிரமத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில், பகிரங்கமாய் பாவம் செய்த ஒரு சகோதரியை வெகுவாய் கண்டித்தேன். அந்த சகோதரி, மிகுந்த மனஸ்தாபப்பட்டு, கண்ணீருடன் மனந்திரும்பி தேவனோடு ஒப்புரவாகினாள். பின்பு அந்த சகோதரி என்னிடம் வந்து, தான் கர்த்தரோடு மனந்திரும்பி ஒப்புரவாகி விட்டதை கூறினாள். மிகுந்த வருத்தத்தோடு என்னிடமும் மன்னிப்பு கேட்டுக் கொண்டாள்!

இந்த சம்பவம் நடந்த சில மாதங்களுக்குப் பிறகு, அந்த சகோதரியை பார்க்கும் போதெல்லாம் "அவள் செய்த குற்றம்" என் மனதின் ஞாபகத்திற்கு வந்ததைக் கண்டேன். **இப்படி ஒரு குற்றத்தை செய்த இவள் எப்படி தேற முடியும்?** என்ற எண்ணமும் எனக்குள் வந்ததைக் கண்டேன். அவளை கூர்ந்து கவனித்து, அவள் செய்த சிறு சிறு தவறுகளைப் பார்த்து "சரிதான், நான் நினைக்கிறபடியே நடக்கிறது" எனவும், என் மனதில் எண்ணிக் கொண்டேன். அது மாத்திரமல்லாமல், அவளுடைய தவறுகளை மற்றவர்களுக்கும் நான் அவ்வப்போது பரிகாசத்துடன் கூறியதுண்டு.

இவ்வாறாக நடந்த காலங்களில் என் உள்ளத்தில் ஒருவித பாரம் வந்து தங்கியதைக் கண்டேன்.

**நான் கர்த்தருடைய சமூகம் சென்றபோது அந்த சகோதரியைக் குறித்த 'காழ்புணர்வை' கர்த்தர் எனக்கு காண்பித்தார்.**

கர்த்தரிடம் சென்று மனம் உடைந்து மனந்திரும்பிய அந்த பெண்ணிடம் நீ ஏன் இவ்வாறு 'சந்தேக பார்வையில்' அன்பற்று நடந்து கொள்கிறாய்? என ஆண்டவர் என்னை கண்டித்து உணர்த்தினார். கர்த்தருடைய உணர்த்துதலைப் பெற்று, நான் மிகுந்த துக்கமடைந்த தெல்லாம் "ஓ கர்த்தாவே, என்னுடைய பாவங்களை மன்னித்து, அதை மீண்டும் நீர் நினைக்காதிருக்கும்போது, கண்ணீருடன் மனந்திரும்பிய ஒரு சகோதரியிடம் மனதில் கிலேசமான உணர்வுகளை வைத்துக் கொண்ட என்னை மன்னித்தருளும்! என் ஜீவியத்தின் நீண்ட பயணத்தில், பல வருடங்கள் கடந்தும், நான் இன்னமும் கல்வாரி அன்பை கற்றுத் தேறவில்லையே?" என உள்ளம் பதைத்து தேவனுடைய பாதத்தில் என்னை சமர்ப்பித்தேன்.

– ஏமி கார்மைக்கேல்

---

## ஸ்திரீகளே 'அழகு ஒப்பனை' தேவைதானா?

அதிகமான பணம், நேரம் செலவழித்துத் தங்களைச் சிங்காரித்துக் கொள்வதில் ஆண்களைவிடப் பெண்கள்தான் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது எங்கு பார்த்தாலும் "Beauty Parlours" (அழகு ஒப்பனை நிலையம்) மிகுந்து விட்டன. அது ஒரு பெரிய சேவைத் தொழிலாக நடைமுறையில் வந்து விட்டது. சமீபகாலமாக ஆண்களது சலூன்கள் கூட Beauty Parlours ஆக மாறிக் கொண்டு வருகின்றன. ஆண்களும் தங்களை அழகுபடுத்துவதில் அதிகம் அக்கறை காட்டத் துவங்கி விட்டனர். அழகு, வெளித்தோற்றம் இவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பெண்களுக்கு.... எது உண்மையான அழகு, எவ்வாறு பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டும், எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் அறிந்து நடப்பது அவசியம்!

தேவனாகிய கர்த்தர் அண்ட சராசரங்களையும் அதில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஒரு வார்த்தையில் படைத்தார். ஆனால் மனிதனை மட்டும் 'சிறப்பான' தனிப்பட்ட முறையில் சிருஷ்டித்தார். ஆதி.12:26,27-ன் படி **தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியும்** மனுஷனை உண்டாக்கினார் என்று பார்க்கிறோம். **தேவ சாயல் என்பதும் தேவ ரூபம் என்பதும்** எத்தனை இயற்கையான **பூரண அழகு** என்பதை யோசித்துப் பாருங்கள்!

அந்த அழகு சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், தன் பாவத்தினால் "தெய்வ சாயல்" இழந்து போனான். நாம் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டபிறகு, இழந்துபோன அவருடைய சாயலைத்

*திரும்பப் பெற்றுக் கொள்ளும் பாக்கியத்திற்குள் இப்போது பிரவேசித் திருக்கிறோம்! அவர் முற்றும் முடிய இரட்சிக்கிறவர்! இவ்வுலகில் வாழும் நாளெல்லாம் ரோமர்.12:2-ன் படி அனுதினமும் மனம் புதிதாகிறதினாலே* **மறுரூபமாகிக் கொண்டே தேவசாயல் அணியும்** *பாக்கியம் பெற்றிருக்கிறோம். இது ஒரு தொடர்ச்சியான நிகழ்ச்சி.... எது வரை? அவரைச் சந்திக்கும் நாள்வரை! ஆம், 1யோவான்.3:2-ன் படி அவரை தரிசிக்கும் போது அவருக்கு ஒப்பாயிருப்போம்!!*

**இதுதான் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் இலட்சியமாக அமைய வேண்டும். இயேசுவைப்போலவே மாற வேண்டும், அதுதான் பூரண அழகு!!** (Perfect Beauty). **நம் இருதயம் அதையே நாட வேண்டும். வெளித்தோற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது அவசியமற்றது!**

*அதற்காக, ஏனோ தானோவென்று உடை உடுத்தி, சுத்தமில்லாத அழுக்குடையோடு காணப்பட வேண்டுமென்பதில்லை! பொது இடங்களில் மற்றவர்கள் முன்பு கண்ணியமாகத் தோற்றமளிக்க வேண்டும். அது, கிறிஸ்தவ பண்பு!*

*"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது முதுமொழி. இருதயம் தேவனுக்கு முன்பாக நேர்மையாக இருக்கும்போது, வெளித் தோற்றத்திலும் தானாகவே மாறுதல் உண்டாகும். ஒருவர் முகத்தைப் பார்த்து அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று ஓரளவு நிதானிக்க முடியுமல்லவா? வெளிப்பிரகரமாக நடை, உடை, பாவனை, தோற்றம், பார்வை, பேச்சு, செயல்களிலும்..... உள்பிரகாரமாக, எண்ணங்கள், உள்நோக்கங்கள், சிந்தனைகள் போன்றவற்றிலும்* **இயேசு அங்கீகரிக்கும் வகையில்** *அவரை முன் மாதிரியாக வைத்து வாழ்வதே, அவரது சாயலை உள்ளும் புறம்பும் தரித்துக் கொள்வதற்கு அடையாளம்! அதற்காகவே தேவன் நம்மை முன் குறித்திருக்கிறார் (ரோமர்.8:29).*

## 'கால கடிகாரம்' உங்களிடம் கணக்கு கேட்கும்!

**ந**ம் *ஆண்டவர் நம் காலங்களை எல்லாம் அறிகின்றவராயிருக் கின்றார். மெய்தான், சர்வவல்லவருக்கு காலங்கள் மறைக்கப்பட வில்லை (யோபு 24:1). நமது காலங்கள் அவரது கரத்திலிருக்கின்றது என்றல்லவோ வேதம் எடுத்துரைக்கின்றது (சங்.31:15).*

*ஓர் அருமையான கர்த்தருடைய தாசன் "தேவனின் காலக் கணிதம்" என்ற நூலில் நமது சிந்தனையைத் தூண்டிவிடும் ஒரு கணக்கை நமக்கு அளித்திருக்கின்றார். ஒரு மனிதன் இவ்வுலகில் 70-*

ஆண்டுகாலம் ஜீவித்திருப்பானானால் அந்த மனிதனின் ஆயுட் காலத்தை, ஒருநாளின் காலை வேளை 7 மணியிலிருந்து ஆரம்பித்து இரவு 11-மணிவரை கொண்டு சென்றிருக்கின்றார். அதின்படி உங்கள் வயது, அதற்கான நாளின் நேரம் என்ன என்பதை அந்த தேவதாசன் கீழே குறிப்பிடுகின்றார் :-

| வயது | நாளின் நேரம் |
|---|---|
| 15 | காலை 10.25 |
| 20 | காலை 11.34 |
| 25 | மாலை 12.42 |
| 30 | மாலை 1.51 |
| 35 | மாலை 3.00 |
| 40 | மாலை 4.08 |
| 45 | மாலை 5.16 |
| 50 | மாலை 6.25 |
| 55 | இரவு 7.34 |
| 60 | இரவு 8.42 |
| 65 | இரவு 9.51 |
| 70 | இரவு 11.00 |

மேற்கண்ட காலக்கணிதத்தின்படி உங்கள் வயது 50 என்றால், உங்களின் ஜீவிதநேரம் மாலை 5:16 ஐக் கடந்து சூரிய அஸ்தமான நேரத்திற்கு நேராக விரைந்து சென்று கொண்டிருக்கின்றது என்பதை அறியுங்கள். நேற்றுதான் என் அருமைத்தாய், சின்னஞ் சிறுவனாயிருந்த என்னைத் தன் இடுப்பில் அமர்த்தி உணவு ஊட்டிய நினைவு மிகவும் பசுமையாக இருக்கும் வேளைதனில், எனது ஆயுட் காலத்தின் பெரும் பகுதி அனலிலிட்ட மெழுகுகாக உருகிக் கரைந்து போயிற்றே என்பதைக் கண்ணீருடன் நினைவுகூருங்கள்.

**என் ஜீவிதநாட்களின் கொழுமையான பகுதியை சத்துரு வஞ்சித்து வீணாக்கி விட்டானே என ஆறாத் துயரம் கொண்டிருங்கள்!**

உங்கள் வாழ்வைக்குறித்த காரியம் என்ன? உங்கள் காலங்கள் இயேசு இரட்சகரின் நாம மகிமைக்கென்று செலவிடப்பட்டதா? உங்கள் மீட்பருக்காக நீங்கள் இதுவரை செய்த காரியம் என்ன? உங்கள் முன்வைக்கப்பட்ட கணக்கீட்டின்படி எனது ஜீவிதநாட்களின் தற்போதைய நேரம் என்ன?

*இந்த உலகத்தில் கர்த்தருக்காகவும், மனுமக்களுக்காகவும் அரும்பெரும் காரியங்களைச் சாதித்தவர்கள் எல்லோரும் மிகவும் இளம் வயதிலேயே அவற்றைச் செய்திருக்கின்றார்கள். கிறிஸ்தவ விசுவாசியான ஐசக் நியூட்டன் புவிஈர்ப்புக் கொள்கையை உலகுக்கு அளிக்கையில் அவருடைய வயது 24 தான்! மார்ட்டின் லூத்தர் கிறிஸ்தவ விசுவாசத்தை சீர்திருத்தியபோது அவரது வயதும் 24 மாத்திரமே! சார்லஸ் டிக்கன்ஸ் தனது புகழ்பெற்ற ஆலிவர் ட்விஸ்ட், பிக்விக் போன்ற இறவாப் புகழ் வாய்ந்த நூல்களைத் தம்முடைய 24, 25-ம் வயதுகளில் எழுதி முடித்தார்! கிறிஸ்தவ விசுவாசியான நெப்போலியன் உலகம் போற்றும் ஒப்பற்ற தளகர்த்தனாக தன்னுடைய 27-ம் வயதில் விளங்கினார். தனது 25-ம் வயதில் அஸிசிப் பட்டணத்துப் பிரான்சிஸ் உலக ஆசைக்கு விலகி நிற்கும் வேத பூர்வமான ஒழுங்குமுறைகளைத் தோற்றுவித்தார். பண்டிதர் பில்லி கிரஹாம் லாஸ்ஏஞ்சல்ஸ் பட்டணத்தில் தனது உலகப் புகழ்பெற்ற சிலுவைப் படை எழுச்சிக் (CRUSADE) கூட்டத்தில் பேசுகையில் அவரது வயது 31 மாத்திரம்தான்! ஜான் வெஸ்லி தனது முழு மூச்சோடு ஆண்டவரின் ஊழியத்தைச் செய்யத் தொடங்குகையில் அவரின் வயது 35! ஒயிட் ஃ பீல்ட் தாம் 24 வயதாக இருந்தபோதே இங்கிலாந்து தேச முழுமைக்கும் தேவனுடைய பரிசுத்தத்தின் புகழை பறைசாற்றி விட்டார்!*

**இப்படியாக, இவர்கள் அனைவரும் தங்கள் அருமை இரட்சகர் இயேசுவிற்காகவும், மனுமக்களுக்காகவும் தங்கள் இளம் வயதிலேயே மகத்தான செயல்களைச் சாதித்திருக்கையில், நம்மைக்குறித்து காரியம் என்ன?**

*எத்தனை ஆத்துமாக்களை ஆண்டவர் இயேசுவண்டை வழி நடத்தியுள்ளோம்? நாம் அவருக்காக இழந்தது யாது? நாம் அவருக்காக, அவருடைய மகிமையின் சுவிசேஷப் பிரபல்யத்திற்காக செலவிட்டது எவ்வளவு? சபையில் செயலாற்றிய பங்கு யாது?*

*ஒன்றை நீங்கள் எப்பொழுதும் உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய ஜீவனுள்ள நாமப் பிரபல்யத்திற்கென்று நீங்கள் மனப்பூர்வமாக,* **கல்வாரி அன்பால் ஏவப்பட்டுச் செலவிடாமல்,** *சுயநல - லாப நோக்கோடு செய்த யாவும், நிலைநிற்பதில்லை!*

*நமது வாழ்நாட்காலம் விரைவாக ஓடி மெழுவர்த்தியைப் போலக் கரைந்து மறைந்துகொண்டிருக்கின்றது. நம்மில் அநேகர் காலத்தின் அருமையை இன்னமும் அறிந்து வாழவில்லை. கர்த்தர் நமக்கு கிருபையாகக் கொடுத்த* **சிறிய ஆயுட்காலத்தை** *அவரது ஜீவனுள்ள நாம மகிமைக்கென்று மாத்திரமே நாம் செலவிட கடனாளிகளாயிருக்கின்றோம்!*

– *லெஸ்லி விதர்ஹெட்*

## ‘கர்த்தருக்கு முன்பான’ மாசில்லாத ஊழியம் எங்கே?

*அப்போஸ்தலனாகிய பவுலையும் அவரது ஊழியத்தையும் சற்று கவனித்துப் பாருங்கள். ஒருகாலத்தில் தேமா, பவுலுக்கு உடன் ஊழியராய் இருந்தார் (கொலோ.4:14). ஆனால், அவர் உலகத்தோடு ஒத்துப்போனபடியால், பவுலை விட்டு விலகினார்! (2தீமோ.4:10). அந்த சமயத்தில், பவுலோடு இருந்த மற்ற உடன் ஊழியர்களும் விலகிச் சென்றார்கள். இச்சமயத்தில் தன் உடன் ஊழியர்களை, தன்னோடு வைத்துக்கொள்ள பவுல் ஏன் பிரியப்படுத்த துணியவில்லை? அப்படி அவர் செய்திருந்தால், தேவன் அவர் மூலமாய் செய்த பணிக்கு முற்றுப் புள்ளி ஏற்பட்டிருக்கும். இவ்வாறு தன் உடன் ஊழியர்களிடம் பவுல் கண்டிப்பாய் நடந்ததினிமித்தம், அவர்களோடு கொண்டிருந்த வெகுஜன மதிப்பு பாதிக்கப்பட்டாலும்.... அது குறித்து பவுல் சிறிதேனும் சஞ்சலம் அடையவில்லை! ஏனெனில், அவர் தன்னுடைய கௌரவத்திற்கு அடிமையாய் வாழவில்லை என்பதே காரணமாகும். ஜனங்கள் தன்னைக் குறித்து என்ன சொல்லுவார்களோ அல்லது என்ன சிந்திப்பார்களோ என்பதைக் குறித்து பவுல் சிறிதேனும் கவலைப் படவில்லை (கலா.1:10).* **‘எதுவானாலும் நடக்கட்டும்’ என** *பவுல்* **தேவனுடைய சத்தியத்திற்கு ஒத்தவேஷம் தரியாமல் உறுதியுடன் நின்றார்!** *ஏனெனில், பவுலை ஆட்கொண்டு உந்தித்தள்ளும், அவருக்குள் வாசமாயிருந்த தேவனுடைய ஆவியானவரே அனைத்திற்கும் மூலகாரணமாயிருந்தார். இவ்வித உறுதியான நிலைப்பாட்டில் பவுல் நின்றபடியால், ஒன்றிற்கும் மேலாக பிளவுகள் ஏற்பட்டன. தன் ஜீவியத்தின் முடிவை எட்டுகையில் “ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும்.... என்னை விட்டு விலகினார்களென்று அறிந்திருக்கிறாய்” எனக்கூறும் நிலைதான் பவுலுக்கு இருந்தது (2தீமோ.1:15). பவுலுடன் இருந்த உடன் ஊழியர்களில்* **தீமோத்தேயு மாத்திரமே** *தன்னைப் போன்ற ஏகசிந்தை உடையவராய் இருந்ததை பவுல் கண்டறிந்தார் (பிலி.2:20).*

*தான் பிரயாசப்பட்ட தேவனுடைய பணி* **“ஓர் செத்த ஸ்தாபனமாக”** *மாறாதிருக்கும்படி பாதுகாக்க பவுல் முயற்சித்த வேளையில், சில பின்னடைவுகளை பவுல் சந்திக்க வேண்டியிருந்தது உண்மைதான்! இவ்வாறு, பல்வேறு நிலைகளில் தேவன் ஒரு தீர்க்கதரிசி மூலமாய் துவங்கிய ஊழியப்பணியில் “சுத்திகரிக்கப் படுதல்” நடந்த செயல்தான், அந்தப்பணி ஓர் செத்த ஸ்தாபனமாய் தேய்ந்து போகாதிருப்பதற்குரிய நிரூபணமாய் இருக்கிறது. தேவனுடைய இவ்வித சுத்திகரிப்பு செயலை பகுத்தறியா விசுவாசிகள் தவறாய் புரிந்து கொள்ளக்கூடும்.*

**ஆனால், தேவனுடைய சத்தியத்தை சகல பரிசுத்தத்தோடு, எவ்வித தரக்குறைவும் ஏற்படாமல் பாதுகாக்கும்படி இந்த தீர்க்கதரிசி ஒத்துப் போகாமல் நின்றதுதான், ஓர் தனிச்சிறப்பாகும்!**

*தேவனால் நியமனம் செய்யப்பட்ட ஒரு தீர்க்கதரிசி, மேற்பூச்சாய் அரவணைத்துப் போகக்கூடியவராகவோ அல்லது அரசியல்வாதியாகவோ இருக்கமாட்டான். இந்த தீர்க்கதரிசி தேவனுடைய பார்வையில் மாத்திரமே ஜீவிப்பவன்! அவனுடைய வசனிப்புகள், தன் ஆண்டவருடைய வசனிப்புகள்போலவே "என்னுடைய ராஜ்யம் இந்த உலகத்திற்குரியது அல்ல!" என்ற முழக்கமாய் இருக்கும். இவன் தனக்கென பாதுகாத்துக்கொள்ள 'எந்த ராஜ்யமும் எந்த ஊழியமும்' இருப்பதில்லை! ஆகவேதான் இயேசு கூறிய வார்த்தைகள் அவனுடைய வாழ்க்கையிலும் நிறைவேறும்.... ஆம், "தீர்க்கதரிசிகளில் ஒருவனாகிலும் அவனுடைய சொந்த ஊரிலோ அல்லது அவனுடைய சொந்த ஜனத்தின் மத்தியிலோ ஏற்றுக்கொள்ளப்பட்டதில்லை" என்பதேயாகும்.*

*நாம் கர்த்தருடைய வழியை பகுத்து அறிந்து கொள்பவர்களாய் இருந்தால், நம் காலத்திற்குரிய தேவனுடைய தீர்க்கதரிசிகள் யார்? என்பதை நன்கு புரிந்து கொள்ள முடியும். அப்போது, நம் காலத்தில் இயங்கும் தேவனுடைய இயக்கத்தில் ஒரு பங்காய் இணைந்து கொள்வோம். அவ்வாறிருந்தால், நாமும் அந்த தீர்க்கதரிசிகளைப் போலவே, என்னக் கிரயமானாலும் ஒத்துப்போக மறுத்து நிற்போம்!*

*கேட்பதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்.*

– *ஜோஜி T.சாமுவேல்* (கோட்டயம்)

---

## 'ஜீவ தண்ணீராய்' கிரியை நடப்பிக்கும் பரிசுத்த ஆவியானவர்!

*ஜலத்திற்கும் பரிசுத்தாவிக்கும் உள்ள தொடர்பை யோ.**7:37-39** வசனங்களில் நாம் தெளிவாக காண்கிறோம். பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்ற ஒருவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றே இயேசு கூறினார். ஆகவே பரிசுத்தாவியின் சின்னமாய் விளங்கும் இந்த* **ஜீவத் தண்ணீர்...**

**தேவன்மீது கொண்ட தாகத்தை நமக்குள் தீர்ப்பவராகவே இருக்கிறார். அதே சமயம், பரிசுத்தாவியானவராகிய இந்த ஜீவத்தண்ணீர், நமது ஜீவியத்திற்குள்ளாக முற்றிலும் நம்மை கழுவி சுத்திகரிக்க நாடுகிறார் என்ற கிரியையை நாம் காண மறந்து விடக்கூடாது.**

*இதை பவுல் தீத்துக்கு எழுதிய **3:4-6** வசனங்களில் காண்கிறோம்.*

“நம்முடைய இரட்சகராகிய தேவனின் தயையும் மனுஷரின் மேல் உள்ள அன்பும் பிரசன்னமான போது.... தமது இரக்கத்தின்படியே **மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தாவியினுடைய புதிதாக்குதலினாலும்** நம்மை இரட்சித்தார்” என கூறினார்.

இவ்வசனங்களில், இரட்சிக்கப்படுதலின் வழியை பவுல் குறிப்பிடுகிறார். அவர் தரும் விளக்கத்தின்படி, நமது இரட்சிப்பு கடந்த கால செயல் மாத்திரமல்ல! அது நிகழ்காலத்திற்கும், இனிவரும் காலத்திற்கும் உரிய இரட்சிப்பின் செயலாகவே இருக்கிறது. இவ்வாறு, நம் பாவங்களிலிருந்து **முற்றிலுமாய் நம்மை இரட்சிக்கவே** தேவன் விரும்புகிறார். அதன் மூலமாய், இனியும் பாவம் நம்மிடத்தில் “ஒன்றுமில்லை” என்ற இடத்தை அடைந்திடும் இரட்சிப்பை நமக்குத் தரவே தேவன் விரும்புகிறார்.

ஆகவே, தேவன் நம்முடைய பாவ தண்டனையிலிருந்து மாத்திரமல்லாமல் (Penalty), பாவ வல்லமையிலிருந்தும் (Power).... பின்பாக பாவத் தடயமே இல்லாத (Presence) இடம் வரைக்கும் நம்மை இரட்சித்திட தேவன் விரும்புகிறார். இதுபோன்ற **பூரண இரட்சிப்பு** இன்னமும் நம்மில் ஒருவருடைய ஜீவியத்திலும் நடந்தேறவில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதாவது, பாவத்தடயமே இல்லாத ஒரே இடம் பரலோகம்தான். ஆகவே இன்று உயிரோடிருக்கும் நாம் அனைவருமே, பரலோகத்தில் பிரவேசிக்கும் போது, முற்றிலுமாய் இந்த பாவத் தடயத்திலிருந்தும் விடுதலையாகி விடுவோம்.

நாம் தேவனிடத்தில் வரும்படி, இயேசுகிறிஸ்து நிறைவேற்றிய இரட்சிப்பின் செயலின் மூலமாய், நம் கடந்தகால “பாவ தண்டனையை” நம்மிடமிருந்து அகற்றி விட்டார். ஆனால் இப்போதோ, நிகழ்காலத்தில், பரிசுத்தாவியானவர் நம்மை முற்றிலும் ஆட்கொண்டு கிரியை செய்யும்படி நாம் அனுமதிக்க வேண்டும்! என்றே தேவன் விரும்புகிறார். இந்த நிகழ்காலத்தில் நம் ஜீவியத் திலுள்ள பாவத்தின் வல்லமையை தகர்த்து, நமக்கு உதவி செய்யும் படியே **பரிசுத்தாவியானவர் கிரியை செய்கிறார்.**

நம்முடைய பூரண இரட்சிப்பிற்கு வகைசெய்யும்படி தீத்து.3:5 வசனம் கூறும் கடைசிப் பகுதியை சற்று கவனியுங்கள். “.... மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தாவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்” என்பதே அந்த விந்தையான வாசகம்!

– சந்தீப் பூணன்

## வாங்க் சைமிங்

### கம்யூனிஸத்தை மறுத்து உயிர்நீத்த போதகர்!



(1907-1973)

போதகர் வாங்க், ஊட் இங் பட்டணத்தில் ஒரு சிறு குழுவிற்கு போதகராயிருந்தார். அந்த பட்டணத்தில் அவருக்கு முன்பாக கிறிஸ்தவ மிஷனெரிகள் பணியாற்றியிருந்தார்கள். போலந்து நாட்டை சார்ந்த சாமுவேல், போர்ச்சுக்கல் நாட்டை சேர்ந்த ஆர்தர், ஜார்ஜ், கிளட்ஸ்டோன் ஆகியோர் அருட்பணி செய்திருந்தார்கள். அவர்களுடைய மிஷனெரி பணியில் 'ஊட் இங் பட்டணத்தில்' நல்ல ஆத்தும அறுவடை நிகழ்ந்தது. 1949-ம் வருடத்தில் இரட்சிக்கப்பட்ட சீனத்து மக்கள் சுமார் 130,000 மக்கள் இருந்தார்கள். அன்றைய கணக்குபடி. அவர்கள் சீனாவின் **20%** மக்களாவர்!

ஊட்இங் பட்டணம் நல்ல கல்வி சாலைகள் கொண்ட சிறந்த பட்டணமாகும். கிறிஸ்தவ சமுதாயத்திற்கு வாங்க் சைமிங் ஆலோசக தலைவராக ஊட் இங் பட்டணத்திற்கு பொறுப்பேற்றார். அதற்குரிய நியமனத்தை 1951-ம் ஆண்டு பெற்றுக்கொண்டார். அப்போது அவருக்கு வயது 44. ஊட் இங் பட்டணத்தின் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ***மியவோ*** மக்களாய் இருந்தார்கள். 1950-ம் ஆண்டு தோன்றிய புதிய அரசாங்கம், தாங்கள் நியமித்த மூன்று முக்கிய முடிவுகளுக்கு கிறிஸ்தவ தலைவர்கள் கையெழுத்திட அனுப்பினார்கள். அவைகள் கிறிஸ்தவ விசுவாசத்தை பாதிக்காதபடியால் வாங்க் சைமிங்கும் அவரோடு இருந்த மற்ற கிறிஸ்தவ தலைவர்களும் உடன்பாடு கையெழுத்திட்டார்கள். அதை அடுத்து, வெகுவிரைவில் அரசாங்கம் அழைத்த "நில - முதலாளித்துவம் ஒழிக்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை நிறைவேற்ற அழைத்த கூட்டத்திற்கு வாங்க் சைமிங் மறுத்து விட்டார். சொந்தமாய் நிலம் வைத்திருப்பவர்களை அவமதிப்பதும், அதை பறிப்பதற்கும் நியமிக்கப்பட்ட கூட்டம். அதிகாரிகள் அவரை நேரடியாக சந்தித்த போது "மனந்திரும்பிய ஏராளமான ஜனங்களுக்கு பாகுபாடு ஏதும் இல்லாமல் ஞானஸ்நானம் கொடுத்த என் கைகள், வேற்றுமைக்கு ஒருபோதும் இணங்காது!" என உறுதிபட கூறிவிட்டார்! சீன அரசாங்கம், தன் எதிர்ப்பைகாட்டி "வாங்க், புரட்சி எதிர்ப்பாளன்" என பகிரங்கமாய் அறிக்கை வெளியிட்டது! அதையடுத்து, போதகர் வாங்க் சைமிங்கோடு 21- கிறிஸ்தவ தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள்! சிறையில், சொல்லொண்ணா துன்பத்திற்கும் இம்சைக்கும் உட்படுத்தப்பட்டார்கள். ரணகளத்தில் அடைந்த துன்பத்தின் ஊடே, வாங்கின் மனைவியும் அவர் மகன்களும் சிறையில் தள்ளப்பட்டார்கள்! முடிவாக, 1973-ம் ஆண்டு, சுமார் 10,000 கிறிஸ்தவ விசுவாச ஜனங்கள் கூடிவந்த அரங்கின் நடுவில் 'வாங்க்' இழுத்துவரப்பட்டு, அவர்கள் கண்களுக்கு முன்பாகவே 'கொலை' செய்யப்பட்டார்!

கிறிஸ்தவ மக்களை அச்சுறுத்த நடந்த இந்த கொலையில், ஒருவர்கூட விசுவாசத்தில் பின்வாங்காமல், எல்லோரும் வாங்க் கொலைசெய்யப்பட்ட இடத்தில் சூழ்ந்து நின்று, அவருக்கு வீர வணக்கம் செய்தார்கள்! கம்யூனிஸ அதிகாரிகள், சற்று வெட்கத்துடன் பின்வாங்கி நின்றார்கள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாழ்வின் கரை சேர்க்கும் விசுவாசத்தின் 'ஆத்தும நங்கூரம்'

சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் ஒரு மரண வீட்டிற்குச் சென்றிருந்தேன். புருஷனை இழந்த இளம் கிறிஸ்தவ மனைவி ஆண்டவரைத் திட்டிக்கொண்டே அழுவதைக் கண்டேன். அந்த சகோதரியின் கணவனின் சடலத்தை அடக்கம் செய்வதற்காகத் தொலைவிலுள்ள கல்லறைத் தோட்டத்திற்கு ஒரு லாரி மூலமாக நாங்கள் எடுத்துக் சென்று கொண்டிருந்தபோது, அந்த சகோதரியும் எங்களுடன் வந்தார்கள். வீட்டிலிருந்து கல்லறைத் தோட்டம் வரை அவர்கள் ஆண்டவரைப் பார்த்து "என்னைப் பார்! என் சின்னஞ்சிறு குழந்தைகளைப் பார்! நாங்கள் எங்கே போவோம்? நாங்கள் உனக்கு என்னென்ன ஊழிய காரியங்களையெல்லாம் செய்தோமே உனக்கு இரக்கமில்லையா, நன்றியில்லையா, கண்களில்லையா?" என்று வசைமாரி பொழிந்துகொண்டே வந்தார்கள். எவ்வளவோ தடுத்துக் கூறினும் அவர்கள் கேட்காமல் தங்கள் பல்லவியைப் பாடிக்கொண்டுதான் வந்தார்கள். அப்படி ஜீவனுள்ள ஆண்டவரை மக்கள் மத்தியில் வைத்து தூஷிக்கச் சொல்லி அவர்களைத் தூண்டிவிட்டவன் பிசாசு! என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும். அன்று யோபு பக்தனின் மனைவியின் உள்ளத்திலிருந்து தேவனைத் தூஷிக்க ஏவிவிட்ட (யோபு.2:9) அதே தீயோன்தான் இந்த இளம் கைம்பெண்ணையும் உசுப்பிவிட்டிருந்தான். **மாந்தர்கள் ஆண்டவரைத் தூஷிக்க வேண்டுமென்பது பிசாசின் ஒரு அலாதி ஆவல்.**

கிறிஸ்தவ பயணத்தில் பயணிக்கும் யாவரும் விழித்துக்கொள்ளக்கடவோம்! ஆழ்கடல் பயணத்தில், கரை சேர வேண்டிய நேரம் வந்துவிட்டது! ஆனால், அந்த கப்பலில், பயணத்தை உறுதிப்படுத்தும் 'நங்கூரம்' இல்லை! அந்நிலையில், அந்த கப்பல் அலசடிப்பட்டு, சேர வேண்டிய கரையைவிட்டு, 100மைல் தாண்டி சென்று விட்டது! இவ்வாறு ஆத்துமாவின் 'விசுவாச நங்கூரம்' இல்லாமல் செல்லும் வாழ்க்கை பயணம், நிச்சயம் நிம்மதியிழந்து அல்லலுற்று வீழும்! இன்றே நமது ஆத்தும நங்கூரமாய் இயேசுவை முழு விசுவாசத்துடன் அண்டி வாழ்வோமாக! (எபி.6:19). அவர் மாத்திரமே நம்மை 'முற்றும் முடிய' காத்து இரட்சிக்க வல்லவர்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.